18.2.2009 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ்
சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட
வேண்டியது

<u>சுருக்கம்</u>

ஆட்சி எல்லை – புதுக்கோட்டை மாவட்டம் – ஆலங்குடி வட்டத்தைச் சீரமைத்து கறம்பக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் (வ.நி.1(1)துறை

<u>அரசாணை (நிலை) எண். 63</u> <u>நாள்.18.2.2009</u>

<u>படிக்க:</u>

1. அரசாணை நிலை எண் 279, வருவாய்த்துறை, நாள். 9.6.2003.
2. புதுக்கோட்டை மாவட்டாட்சியர் கடித எண். ந.க.எண்.ஆர்.1/13961/2008 நாள் 18.6.2008.
3. முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண். பணி.6(4)/15531/2007 நாள் 21.1.2009.

-----

<u>ஆணை:–</u>

மாண்புமிகு அமைச்சர் நிதி அவர்கள் அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2008–2009 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் கீழ்காணும் அறிவிப்பினை வழங்கினார்கள்:–

> **""புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, கறம்பக்குடியையும், பொன்னமராவதியையும் தலையிடங்களாகக் கொண்டு இரு புதிய வருவாய் வட்டங்கள் அமைக்கப்படும்."**

மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க கறம்பக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் அமைப்பது குறித்து முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் விரிவான அறிக்கை பெறப்பட்டது.

2. முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கையினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையினைத் தளர்த்தி புதுக்கோட்டை மாவட்டம் தற்போதைய ஆலங்குடி வட்டத்திலிருந்து சில வருவாய் கிராமங்களைப் பிரித்து, கறம்பக்குடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய கறம்பக்குடி வட்டத்தை உருவாக்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் கறம்பக்குடி வட்டம் 19.2.2009 முதல் செயல்படும். சீரமைப்பிற்குப் பின் இந்த இரு வட்டங்களும் பின்வருமாறு அமையும்:–

| <u>வட்டம்</u> | <u>குறுவட்டம்</u> |
|---|---|
| 1. ஆலங்குடி | 1. வல்லநாடு<br>2. வெண்ணாவல்குடி<br>3. கீரமங்கலம்<br>4. ஆலங்குடி |
| 2. கறம்பக்குடி | 1. கறம்பக்குடி<br>2. மழையூர் |

3. இந்த ஆணையின் இணைப்பு 1–ல் குறிப்பிட்டுள்ள அறிவிக்கை 18.2.2009 நாளிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பு இதழில் வெளியிடப்படும்.

4. புதிய கறம்பக்குடி வட்டத்திற்கு இந்த ஆணையின் இணைப்பு–2 குறிப்பிட்டுள்ளவாறு 24 பணியிடங்கள் வழங்கப்படுகிறது. அதில் 11 புதிய பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. இப்பணியாளர்கள், தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதரப் படிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்கள். மேலும் இணைப்பு–2ல் குறிப்பிட்டுள்ளவாறு ஆலங்குடி வட்டத்திலிருந்து புதிய கறம்பக்குடி வட்டத்திற்கு மறு பணி பரவலமர்த்தல் (Redeployment) மூலம் மாற்றப்படும் 10 பணியாளர்கள் உடனடியாக புதிய வட்டத்தில் பணி ஏற்பர். அவர்களுடன், தளவாடம் மற்றும் இதரப் பொருட்களும் மாற்றப்பட வேண்டும். இரவுகாவலர் பணியிடத்தை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமும் நில அளவைப் பிரிவில் முதுநிலை வரைவாளர் மற்றும் சார் ஆய்வாளர் பணியிடங்களை மாவட்ட ஒப்பளிப்பு பணியிடங்களிலிருந்து மறு பணி பரவலமர்த்தல் மூலமும் நிரப்பிட வேண்டும்.

5. புதிய கறம்பக்குடி வட்டாட்சியருக்கு ஈப்பு வாங்க தொடராச் செலவினமாக ரூ.5.25 இலட்சமும் இதற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் தொடரும் எரிபொருள் செலவினமாக ரூ.45,000/–க்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

6. புதிய கறம்பக்குடி வட்டத்திற்கு மரத் தளவாடங்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.75,000/–க்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

7. எதிர்பாரா ஆரம்ப செலவினமாக (Start-up Expenditure) மிதிவண்டி, சுவர்கடிகாரம், பணப்பெட்டி முதலான வாங்குவதற்கு ரூ.5,000/–க்கும் சில்லரை செலவினமாக ரூ.5,000/–க்கும் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

8. பின்வரும் அலுவலகப் பொருட்களை, புதிய கறம்பக்குடி வட்டத்திற்கு இலவசமாக வழங்குமாறு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்:–

(i) மின்சாரத்தால் இயங்கும் படிப் பெருக்கி இயந்திரம் : 1
(ii) எண் குறியீடு இயந்திரம் : 1
(iii) எழுதுபொருட்கள், தேவைப்படும் படிவங்கள் மற்றும் அரசிதழ்கள் : தேவையானவை
(IV) உலோக சீல் (முத்திரை) : 1
(V) ஆங்கிலம் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரம் : 1

**9.** கறம்பக்குடி வட்ட அலுவலகத்திற்காக புதிய கட்டிடம் கட்டப்படும் வரை, அலுவலக வாடகையாக ஆண்டொன்றிற்கு ரூ.1,44,000/- ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

**10.** கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு, நீட்டிப்புடன் (With Extension) கூடிய ஒரு தொலைபேசியும், வட்டாட்சியரின் இருப்பிடத்திற்கு ஒரு தொலைபேசியும் அமைப்பதற்கு, தொடரா செலவினமாக ரூ.6,000- மற்றும் அதற்கு ஆண்டொன்றுக்கு ஆகும் தொலைபேசி கட்டணம் ரூ.30,000/-க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**11.** கறம்பக்குடி அலுவலகத்திற்கு கணிணி வாங்க ரூ.50,000/- ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**12.** மேலே வழங்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்புகள் தொடர்பாக உடன் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதன்மை செயலாளர் மற்றும் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**13.** மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:-

(அ) **பணியாளர் நியமனம் : -**

" 2053.00 - மாவட்ட நிருவாகம் -094 ஏனைய பணியாளரமைப்பு - I - திட்டத்தில் சேராதது- AB வட்டப் பணியாளரமைப்புகள் - 01. சம்பளங்கள் "

(து.தொ.கு. 2053 00 094 AB 0102)

<u>நில அளவை பணியிடங்கள்</u>

"2029-00 நில வருவாய் 102 நில அளவை அலுவலகம் நிலவரி ஏற்பாட்டுப் பணிகள்-I திட்டத்தில் சேராதது-AE மத்திய நில அளவை அலுவலகம்-01 சம்பளங்கள்

(து.தொ.கு. 2029 00 102 AE 0107)

<u>குடிமைப் பொருள் பிரிவுக்காக அலுவலர் நியமன செலவினம்:-</u>

"3456 00 -குடிமைப் பொருள் - 001. நெறிப்படுத்துதலும், நிருவாகமும் - I - திட்டத்தில் சேராதது - AB வட்டப் பணியாளரமைப்புகள் - 01. சம்பளங்கள் "

(து.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) <u>தொலைபேசி :- ரூ. 36,000/-</u>

"05 அலுவலக செலவுகள் - 01 தொலைபேசிக் கட்டணங்கள்"

(து.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) <u>சில்லரைச் செலவினம் மற்றும் சுவர் கடிகாரம் முதலியன :-ரூ.10,000/-</u>

"05 அலுவலக செலவுகள் - 02. ஏனைய சில்லரைச் செலவுகள்"

(து.தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) <u>அறைகலன்கள்:</u>-ரூ.75,000/-

" 05 அலுவலக செலவுகள் 05 அறைகலன்கள்"

(து.தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) <u>ஈப்பு :-ரூ.5,25,000/-</u>

" 21 மோட்டார் வண்டிகள் - 01. வாங்குதல்"

(து.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஊ) <u>கட்டிடவாடகை:-ரூ.1,44,000/-</u>

" 06 வாடகை கட்டணம் மற்றும் வரிகள் 01 வாடகை"

(து.தொ.கு.2053 00 094 AB 0611)

(எ) <u>எரிபொருள் செலவினம்:—ரூ.45,000/—</u>

" 45 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்"

(து.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஏ) <u>கணினி வாங்குதல்:—ரூ.50,000/—</u>

" 76 கணினியும் துணைப் பாகங்களும் 01 வாங்குதல்"

(து.தொ.கு. 2053 00 094 AB 7614 )

**14.** இந்த ஆணையில் கண்டுள்ள தொகைகளைப் பெற்று வழங்குவதற்கு, புதுக்கோட்டை மாவட்டாட்சியருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. வட்ட அலுவலகத்திலிருந்து பெறப்படும் பணப் பட்டியல்களுக்கு பணம் பட்டுவாடா செய்ய சம்பந்தப்பட்ட சார் நிலை கருவூல அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் புதுப் பணிகள் (New Service) குறித்ததாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு—செலவு பொது—1)த்துறையில் தனியாக வெளியிடப்படும். எதர்பாராச் செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு—செலவு பொது—1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**15.** இந்த ஆணை நிதித் துறை அலுவல் சார்பற்ற எண்.48/JS(DK)/ நிதி(வருவாய்)/2009, நாள்.18.2.2009 மற்றும் ஏ.எஸ்.எல்.எண்.1708 (A.S.L.No.1708) (ஆயிரத்து எழுநூற்று எட்டு) இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**/ஆளுநரின் ஆணைப்படி/**

**கே. தீனபந்து**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை —79 (18.2.2009 நாளிட்ட சிறப்பு அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை—5.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை—5.
முதன்மை ஆணையர் மற்றும் நில சீர்திருத்த ஆணையர், சென்னை—5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை5.
ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்டம், சென்னை—5.
கருவூலத் துறை இயக்குநர், சென்னை—35.
மாவட்டாட்சியர், புதுக்கோட்டை.
மாவட்ட கருவூல அலுவலர், புதுக்கோட்டை.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை—18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை—18.
சம்பள கணக்கு அலுவலர், (கிழக்கு), சென்னை—5.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை சென்னை—2.
அனைத்து துறை தலைவர்கள்,
பொது (தேர்தல்) துறை, சென்னை—9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை—104.

செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை–9.
செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துறை, சென்னை–9.
மாநில கணக்காயர் (ஆய்வு) சென்னை–35.
நகல்:
முதலமைச்சரின் செயலாளர், சென்னை –9.
வருவாய்த் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை செயலலளரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (வருவாய்) /வ.செ.பொ.II/வ.செ.ஒ.துறை, சென்னை–9.
வருவாய்த்துறை, (அனைத்துப் பிரிவுகள்) சென்னை–9. (துக்க தொடர் மேல் நடவடிக்கைக்காக).

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

## இணைப்பு–1

## அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆலங்குடி வட்டத்தைப் பிரித்து, 2009ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19 ஆம் நாளிலிருந்து கறம்பக்குடி தலைமையிடமாகக் கொண்டு கறம்பக்குடி வட்டமொன்று, கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிய கறம்பக்குடி வட்டத்தில் உள்ளடங்கும் 1. கறம்பக்குடி 2. மழையூர் ஆகிய குறுவட்டங்கள் மீது, தற்போது ஆலங்குடி வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள், இனி கறம்பக்குடி வட்டாட்சியரால் 2009 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

| வ.எண். | குறுவட்டத்தின் பெயர் | வருவாய் கிராமங்களின் பெயர் |
|---|---|---|
| 1. | கறம்பக்குடி | கறம்பக்குடி<br>பிலாவிடுதி<br>தீத்தான் விடுதி<br>ராங்கியன் விடுதி<br>குளந்திரான்பட்டு<br>செங்கமேடு<br>திருப்பாக்கோவில்<br>ஒடப்பவிடுதி<br>சின்னான்கோன்விடுதி<br>காட்டாத்தி<br>கலியரான் விடுதி<br>கிளாங்காடு<br>முதலிப்பட்டி<br>பாப்பாப்பட்டி<br>கல்லுமடை<br>ரெகுநாதபுரம்<br>புதுவிடுதி<br>கீராத்துார்<br>தட்டாமனைப்பட்டி<br>அம்புக்கோவில்<br>மருதன்கோன் விடுதி<br>மயிலன்கோன்பட்டி<br>கறம்பவிடுதி<br>வாண்டான் விடுதி (வடக்களூர் வட்டம்)<br>பேயாடிப்பட்டி<br>பந்துவக்கோட்டை |

| | | |
|---|---|---|
| 2. | மழையூர் | முள்ளங்கறிச்சி வடக்கு<br>முள்ளங்கறிச்சி தெற்கு<br>ஆயிப்பட்டி<br>கருப்பட்டிப்பட்டி<br>மழையூர்<br>தெற்குத் தெரு<br>தீத்தானிப்பட்டி<br>அதிரான் விடுதி<br>வெள்ளாள விடுதி<br>வலங்கொண்டான் விடுதி<br>கரு.கீழத்தெரு<br>(கரு.கீழவட்டம்)<br>குரும்பிவயல்<br>ஈச்சன் விடுதி<br>வாணக்கன்காடு<br>(கரு.மேலவட்டம்)<br>கரு. தெற்குத்தெரு<br>வடதெரு<br>பொன்னன் விடுதி<br>கணக்கன் காடு<br>திருமணஞ்சேரி<br>இலைகடி விடுதி<br>பட்டத்திக்காடு<br>பல்லவராயன்பத்தை<br>மாங்கோட்டை<br>களபம் |

**கே. தீனபந்து,**
அரசு முதன்மைச் செயலாளர்

**/உண்மை நகல்/**

பிரிவு அலுவலர்

| வ. எண். (1) | பணியிடம் பெயர் (2) | அரசு நிர்ணயித்து உள்ள அளவுகளின் படி ( 3 – 6 உள் வட்டம்) (3) | தற்போது உள்ள ஆலங்குடி வட்டத்தில் பணியாளர் களின் எண்ணிக்கை (4) | ஆலங்குடி வட்டத்தில் நிறுத்தி –வைக்கும் பணியிடங்கள் (5) | ஆலங்குடி வட்டத்தில் இருந்து கறம்பக்குடி வட்டத்திற்கு மாறுதல் செய்யும் பணி யிடங்கள் (6) | கறம்பக்குடி வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கப் படும் புதிய பணியிடங்கள் (7) | கறம்பக்குடி வட்டத்திற்கு அனுமதிக்கப் படும் மொத்த பணியிடங்கள் (8) | உபரியாக உள்ள ரத்து செய்யப் படும் பணி இடங்கள் (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருவாய் பிரிவு** | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 2 | தனி வட்டாட்சியர் (ச.பா.தி) | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 3 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | 1 | 1* | -- | 1 | - |
| 4 | மண்டல துணை வட்டாட்சியர் | 1 | 2 | 1 | - @ | - | - | - |
| 5 | உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் உட்பட) | 10 | 12 | 10 | 2 | 3 | 5 | - |
| 6 | இளநிலை உதவியாளர் | 4 | 8 | 4 | 2 | -- | 2 | 2 |
| 7 | தட்டச்சர் | 1 | 2 | 1 | 1 | -- | 1 | -- |
| 8 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | 1 | -- | 1 | 1 | -- |
| 9 | பதிவரை எழுத்தர் | 1 | 3 | 1 | 1 | -- | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | 7 | 10 | 3 | 3 | -- | 3 | 4 |
| 11 | மசால்சி | 1 | 1 | 1 | -- | -- | -- | -- |
| 12 | இரவு காவலர் | 1 | 1 | 1 | -- | 1 # | 1 | - |
| | மொத்தம் (1) | 30 | 43 | 26 | 10 | 7 | 17 | 7 |
| | **நில அளவைப் பிரிவு** | | | | | | | |
| 13 | வட்ட துணை ஆய்வாளர் | 1 | 1 | 1 | - | 1 | 1 | - |
| 14 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | 1 | 1^ | - | 1 | - |
| 15 | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | 1 | 1 ^ | - | 1 | - |
| 16 | வட்ட நில பதிவுறு வரைவாளர் | 1 | 1 | 1 | - | 1 | 1 | - |
| 17 | புல உதவியாளர் | 1 | 2 | 1 | 1 | - | 1 | - |
| | மொதத்ம் (2) | 5 | 6 | 5 | 3 | 2 | 5 | - |
| | **வட்டவழங்கல் பிரிவு** | | | | | | | |

* மண்டல துணை வட்டாட்சியர் பதவி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பணியிடமாக மாற்றலாம்.
@ இரண்டு உள்வட்டங்களை கொண்ட வட்டத்திற்கு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் வழங்கப்படவில்லை.
# இரவுக் காவலர் பணியிடம் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக நிரப்பப்பட வேண்டும்.
^ மாவட்டத்தில் உபரியாக உள்ள பணியிடங்களை மாற்றுப் பணி அடிப்படையில் நியமிக்க வேண்டும்.
இரண்டு உள்வட்டங்களை கொண்ட வட்டத்திற்னு தனி வட்டாட்சியர் ( சமூக பாதுகாப்பு திட்டம்) அனுமதிக்கப்படவில்லை.

கே. தீனபந்து
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்